# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் I பரீட்சை – 2021 சனவரி

## (101) நிதிக் கணக்கீடு

---

## பகுதி A

### வினா இல. 01

இல. **1.1** தொடக்கம் **1.10** வரையான வினாக்களில் தரப்பட்ட 4 தெரிவுகளிலிருந்து மிகச் சரியான விடையைத் தெரிவு செய்யுமாறு கேட்கப்பட்டது. இல. **1.11** தொடக்கம் **1.15** வரையான வினாக்களில் தரப்பட்ட கூற்றுக்கள் **சரியானதா** அல்லது **தவறானதா** எனக் குறிப்பிடும்படி கேட்கப்பட்டது. இல. **1.16** தொடக்கம் **1.20** வரையான வினாக்களில், தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் விடையளிக்குமாறு கேட்கப்பட்டது.

இந்த உப வினாக்களுக்கு அளிக்கப்பட்ட விடைகளில் இனங்காணப்பட்ட பொதுவான பலவீனங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**வினா இல. 1.1**

கணக்கீட்டுச் செயன்முறையின் உள்ளீடுகள் பற்றிப் பரீட்சிக்கப்பட்டது. ''கணக்கீட்டு உள்ளீடுகள் என்றால் என்ன'' என்பது பற்றி விளங்கிக்கொள்ளாத சில பரீட்சார்த்திகள் சரியான விடை அளிக்கப்பட்டிருந்த விடை இல. (3) இற்குப் பதிலாக விடை இல. (2) இனைத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.2**

இங்கு வணிகம் ஒன்றின் நாட்டதாரர்களை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. இது ஒரு இலகுவான வினாவாக இருந்தபோதிலும், சில பரீட்சார்த்திகள் உள்ளடக்கத்தைச் சரியாக விளங்கிக்கொள்ளாது சரியான விடை அளிக்கப்பட்டிருந்த விடை இல. (4) இனைத் தெரிவு செய்யாது விடை இலக்கங்கள் (2) அல்லது (3) இனைத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.3**

முன்னெச்சரிக்கை எண்ணக்கருவின் பிரயோகம் பற்றிப் பரீட்சிக்கப்பட்டது. கணக்கீட்டு எண்ணக்கருக்கள் மீதான பரீட்சார்த்திகளின் அறிவு போதுமானதாக இல்லை என்பதை அவதானிக்க முடிந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் சரியான விடை அளிக்கப்பட்டிருந்த விடை இல. (1) இனைத் தெரிவு செய்யாது விடை இலக்கங்கள் (3) அல்லது (4) இனைத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.4**

''சொத்து'' என்னும் பதத்தை வரையறை செய்யுமாறு கேட்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் வினாவைச் சரியாக விளங்கிக்கொள்ளவில்லை. இதனால் அவர்கள் சரியான விடை அளிக்கப்பட்டிருந்த விடை இல. (1) இற்குப் பதிலாக விடை இலக்கங்கள் (2) மற்றும் (3) இனைத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.5**

தரப்பட்ட ஊடுசெயல்களில் இருந்து சொத்துக்களில் அதிகரிப்பை ஏற்படுத்துகின்ற ஊடுசெயலை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. எவ்வாறாயினும், வினா பற்றிய சரியான விளக்கமின்றி, சில பரீட்சார்த்திகள் சரியான விடை அளிக்கப்பட்டிருந்த விடை இல. (3) இனைத் தெரிவு செய்வதற்குப் பதிலாக விடை இலக்கம் (1) இனைத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.6**

இந்த வினா தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. கணக்கீட்டு எண்ணக்கருக்கள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு மிகவும் தாழ்ந்த மட்டத்திலும் போதியதாக இல்லாமலும் இருந்ததை அவதானிக்க முடிந்தது. இதனால், சில பரீட்சார்த்திகள் விடை இல. (2) இல் தரப்பட்டிருந்த சரியான விடைக்குப் பதிலாக தவறான விடைகளைத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.7**

இங்கு கடன்பட்டோர் கட்டுப்பாட்டுக் கணக்கைத் தயாரிப்பதன் மூலம் கடன் விற்பனைப் பெறுமதியை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் விற்பனைத் திரும்பல் நாட்குறிப்பேட்டின் மொத்தத்தை கட்டுப்பாட்டுக் கணக்கின் செலவுப் பக்கத்தில் பதிவு செய்வதற்குப் பதிலாக அதனை வரவுப் பக்கத்தில் பதிவு செய்திருந்தனர். இதனால் அவர்களால் விடை இல. (1) இல் தரப்பட்ட சரியான விடையைப் பெற இயலவில்லை.

**வினா இல. 1.8**

இந்த வினா ரூபா 2,000,000/- இற்கு 2018 ஏப்ரல் 01 இல் கொள்வனவு செய்யப்பட்ட மோட்டார் வாகனமொன்றின் வருடாந்தத் தேய்மானக் கட்டணத்தை, குறைந்து செல்லும் மீதி முறையின் கீழ் கணிப்பிடுமாறு கேட்டிருந்தது. எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் நேர்கோட்டு முறையில் தேய்மானத்தைக் கணிப்பிட்டிருந்ததால் தவறான விடையினைப் பெற்றிருந்தனர். வேறு சிலர் குறைந்து செல்லும் மீதி முறையில் 2 ஆண்டுகளுக்கான தேய்மானத்தைக் கணிப்பிட்டு தவறான விடையைப் பெற்றிருந்தனர்.

**வினா இல. 1.9**

வங்கிக் கடனொன்றைப் பெறுவதன் காரணமாக கணக்கீட்டுச் சமன்பாட்டில் ஏற்படக்கூடிய தாக்கம் பற்றிய அறிவு இங்கு பரீட்சிக்கப்பட்டது. பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இவ்வினாவுக்குச் சரியான விடையினைத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.10**

உரிமையாளர் தனது தனிப்பட்ட மோட்டார் வாகனத்தை வணிகத்திற்கு மாற்றும்போது மேற்கொள்ளப்படுகின்ற சரியான இரட்டைப் பதிவினை இனங்காணுமாறு கேட்கப்பட்டது. இதற்கான சரியான விடையானது விடை இல. (3) இல் வழங்கப்பட்டிருந்த போதிலும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் விடை இல. (4) இனைத் தெரிவு செய்திருந்தனர்.

**வினா இல. 1.11**

கணக்கீட்டு மென்பொருளுக்கான உதாரணங்கள் பற்றிய பரீட்சார்த்திகளின் அறிவு போதியதாக இல்லை என்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இதனால், தரப்பட்ட கூற்று சரியானதாக இருந்தபோதிலும், அது தவறான கூற்று எனக் குறிப்பிட்டிருந்தனர்.

**வினா இல. 1.12**

அதிகளவான பரீட்சார்த்திகள் தரப்பட்ட கூற்று தவறானது எனச் சரியாக இனங்கண்டிருந்தனர்.

**வினா இல. 1.13**

*“உரிமையாளர் மேலதிக மூலதனம் ஒன்றை வழங்கும்போது அது வியாபார இலாபத்தைப் பாதிக்காது”*. எனவே வினாவில் தரப்பட்ட கூற்று பிழையானது. எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் அதன் கருத்தை விளங்கிக்கொள்ளாது அது சரியான கூற்று எனக் குறிப்பிட்டிருந்தனர்.

**வினா இல. 1.14**

*“கடன் அடிப்படையில் ஆதனம், பொறி மற்றும் உபகரணம் கொள்வனவு செய்யப்படும்போது, அது பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்படும்.* இது ஒரு சரியான கூற்றாக இருந்தபோதிலும், பொது நாட்குறிப்பேட்டில் பதிவு செய்யப்பட வேண்டிய ஊடுசெயல்கள் பற்றிய போதிய விளக்கத்தைக் கொண்டிராத பரீட்சார்த்திகள், இக்கூற்று தவறானது எனக் குறிப்பிட்டிருந்தனர்.

**வினா இல. 1.15**

“வரவுக் குறிப்பு என்பது வணிக நிறுவனமொன்றில் பயன்படுத்தப்படும் மூல ஆவணம் ஒன்றாகும்’’. பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் இக்கூற்று சரியானது எனச் சரியாக விடையளித்திருந்தனர்.

இல. **1.16, 1.17, 1.19** ஆகிய வினாக்களுக்கு குறுகிய விடைகளை எழுதுமாறு கேட்கப்பட்டதுடன் இல. **1.18, 1.20** ஆகிய வினாக்களுக்கு, தரப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விடையெழுதுமாறும் கேட்கப்பட்டது.

இனங்காணப்பட்ட பொதுவான பலவீனங்கள் கீழ்வருமாறு:

**வினா இல. 1.16**

இங்கு, வங்கி கணக்கிணக்கக் கூற்றினைத் தயாரிப்பதற்கான காரணங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. சில பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சிக்கவில்லை. ஏனைய பரீட்சார்த்திகளால் அளிக்கப்பட்ட விடைகளும்கூட சரியானதாக அமையவில்லை.

**வினா இல. 1.17**

பெரும்பாலான பரீட்சார்த்திகள் கணக்கீட்டின் நோக்கங்கள் பற்றிய எவ்வித அறிவையும் கொண்டிருக்கவில்லை. இதனால், அவர்கள் சம்பந்தமற்ற விடைகளை அளித்திருந்ததுடன் அவர்களால் புள்ளிகளைப் பெற இயலவில்லை.

**வினா இல. 1.18**

இங்கு, தரப்பட்ட தகவல்களின் அடிப்படையில் 2020 மார்ச் 31 இலான மொத்தச் சொத்துக்களைக் கணிப்பிடுமாறு கேட்கப்பட்டது. சரியான விடை ரூபா 750,000/- ஆக இருந்த போதிலும், தரப்பட்ட தகவல்களைச் சரியாகப் பயன்படுத்தாததன் காரணமாக சில பரீட்சார்த்திகள் ரூபா 600,000/-, ரூபா 250,000/-, ரூபா 450,000/- போன்ற பல்வேறு தவறான விடைகளைப் பெற்றிருந்தனர்.

**வினா இல. 1.19**

இங்கு நிதித் தகவல்களின் வரையறைகளைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சிக்கவில்லை. விடையளித்திருந்தவர்கள்கூட சரியான விடையை வழங்கியிருக்கவில்லை.

**வினா இல. 1.20**

இங்கு, விற்பனை நாட்குறிப்பேட்டைத் தயாரிப்பதன் மூலம் விற்பனைக் கணக்கிற்கு மாற்றப்பட வேண்டிய தொகையை துணியுமாறு கேட்கப்பட்டது. சிலர் விற்பனை நாட்குறிப்பேட்டைத் தயாரிக்கும்போது வியாபாரக் கழிவைக் கவனத்தில் கொள்ளாததன் காரணமாக சரியான விடையான ரூபா 16,640/- இனைப் பெறுவதற்குப் பதிலாக தவறான விடையான ரூபா 17,600/- இனைப் பெற்றிருந்தனர்.

# <u>பகுதி B</u>

## வினா இல. 02

இவ்வினா **(a), (b)** என 2 பகுதிகளைக் கொண்டது. பகுதி **(a)** ஆனது வழுக்களைத் திருத்துவதற்கான நாட்குறிப்பேட்டுப் பதிவுகளைத் தயாரிப்பதற்குத் தேவைப்படுத்தியது. **பகுதி (b)** ஆனது தொங்கற் கணக்கைத் தயாரிக்கும்படி கேட்டிருந்தது.

ஒட்டுமொத்தத்தில், அதிகளவான பரீட்சார்த்திகளால் இவ்வினாவுக்கு விடையளிக்க முடிந்திருந்ததுடன் சிறந்த புள்ளிகளையும் பெற முடிந்தது.

எவ்வாறாயினும், பின்வரும் பலவீனங்களும் அவதானிக்கப்பட்டன:

**(a) நாட்குறிப்பேட்டுப் பதிவுகளின் தயாரிப்பு:**

(1) சில பரீட்சார்த்திகள் நாட்குறிப்பேட்டுப் பதிவுகளுக்குப் பதிலாக பேரேட்டுக் கணக்கு களைத் தயாரித்திருந்தனர்.

(2) தொங்கற் கணக்கின் ஊடாகச் சரிசெய்யப்பட வேண்டிய பதிவுகள் அடையாளம் காணப்படவில்லை.

(3) பதிவுகளைப் பதியும்போது வரவு மற்றும் செலவுப் பதிவுகளை மாற்றி மாற்றிப் பதிவு செய்யப்பட்டிருந்தன.

(4) பதிவு இலக்கம் (4) இன்படி, ரூபா 427,500/- சம்பளக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டும் என்றபோதிலும், பெரும்பாலானவர்களால் ரூபா 475,000/- சம்பளக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(5) பதிவு இலக்கம் (6) இன்படி, தொங்கற் கணக்கு ரூபா 70,000/- இனால் வரவு வைக்கப்பட வேண்டும். ஆயினும் அதிகளவான பரீட்சார்த்திகள் வட்டி வருமானம் அல்லது வட்டிச் செலவுக்குப் பொருத்தமான பெறுமதியான ரூபா 35,000/- இனால் மாத்திரம் அதனை சீராக்கம் செய்திருந்தனர்.

**(b) தொங்கற் கணக்கின் தயாரிப்பு:**

(1) சில பரீட்சார்த்திகள் தொங்கற் கணக்கின் ஆரம்ப வரவு மீதியை அந்தக் கணக்கின் செலவுப் பக்கத்தில் பதிவு செய்திருந்தனர்.

(2) தொங்கற் கணக்கின் ஆரம்ப மீதி பதிவு செய்யப்படவில்லை.

(3) சிலர் தொங்கற் கணக்கின் செலவுப் பதிவுகளை வரவுப் பக்கத்திலும் வரவுப் பதிவுகளைச் செலவுப் பக்கத்திலும் பதிவு செய்திருந்தனர்.

(4) வட்டி வருமானம் மற்றும் செலவினத்திற்கான தொங்கற் கணக்கிற்கு ரூபா 70,000/- வரவு வைக்கப்பட வேண்டும் என்ற போதிலும், ரூபா 35,000/- மாத்திரம் தொங்கற் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

### வினா இல. 03

இவ்வினா பேரேட்டுக் கணக்குகளைத் தயாரித்ததன் பின்னரான பரீட்சை மீதியைத் தயாரிக்குமாறு கேட்டிருந்தது. இவ்வினாவுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் காணப்பட்டது.

எவ்வாறாயினும், பின்வரும் பலவீனங்களும் அடையாளங் காணப்பட்டன:

(1) சில பரீட்சார்த்திகள் மூலதனம், மேலதிக மூலதனம், காசு விற்பனைகள், கடன் விற்பனைகள், காசுக் கொள்வனவுகள் மற்றும் கடன் கொள்வனவுகளைப் பரீட்சை மீதியில் தனித்தனி உருப்படிகளாக் காட்டியிருந்தனர்.

(2) பரீட்சை மீதியைத் தயாரிக்குமாறு வினாவில் கேட்கப்பட்ட போதிலும் சில பரீட்சார்த்திகள் பேரேட்டுக் கணக்குகளை மாத்திரம் தயாரித்திருந்தனர்.

(3) மோட்டார் லொறிக்கு ஒரு மாதத்திற்கான தேய்மானத்தைக் கணிப்பிடாது, சிலர் வருடாந்த தேய்மானம் ரூபா 480,000/- இனைக் கணிப்பிட்டு, அதனை சம்பந்தப்பட்ட கணக்குகளில் பதிவு செய்திருந்தனர்.

(4) சிலர் வரவுக் கணக்குகளையும் செலவுக் கணக்குகளையும் மாற்றி எழுதியிருந்தனர்.

(5) கடன் விற்பனை மற்றும் கடன் கொள்வனவுகளை சம்பந்தப்பட்ட கட்டுப்பாட்டுக் கணக்குகள் ஊடாக இனங்காணத் தவறியிருந்தனர்.

(6) அட்டுறு மின்சாரம் ரூபா 25,000/- ஆனது பரீட்சை மீதியில் சீராக்கம் செய்யப்படவில்லை.

### வினா இல. 04

இவ்வினா உற்பத்திக் கணக்கைத் தயாரிப்பது பற்றிய அறிவைப் பரீட்சித்தது. இவ்வினாவுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.

எவ்வாறாயினும், பின்வரும் பலவீனங்களும் அடையாளங் காணப்பட்டன:

(1) புத்துருவாகும் வேலைகள் முதன்மைக் கிரயத்தில் மதிப்பிடப்பட வேண்டும் என வினாவில் தெளிவாகக் குறிப்பிட்டிருந்த போதிலும், சில பரீட்சார்த்திகள் இதனை தொழிற்சாலை மேந்தலைகளின் பின்னர் செம்மையாக்கம் செய்திருந்தனர்.

(2) சிலரால் மின்சாரம் மற்றும் தேய்மான ஒதுக்கீடுகளை வினாவில் தரப்பட்டவாறான வீதங்களில் தொழிற்சாலைக்கும் அலுவலகத்திற்கும் இடையில் சரியானவாறு பிரிக்க முடியவில்லை.

(3) சில பரீட்சார்த்திகள் நேர் கூலியை தொழிற்சாலை மேந்தலைகளின் கீழ் பதிவு செய்திருந்தனர்.

(4) சில பரீட்சார்த்திகளிடம் உற்பத்திக் கணக்கின் வடிவம் என்ன என்பது பற்றிய எவ்வித அறிவும் காணப்படவில்லை.

(5) சிலர் கிரயம் மீதான 10% இலாபத்தைக் கணிப்பிடவில்லை.

(6) மேலும், வேறு சிலர் நேர் மற்றும் நேரில் செலவினங்களைச் சரியாக இனங்காணவில்லை.

## வினா இல. 05

இவ்வினா **(A), (B)** என 2 பகுதிகளைக் கொண்டிருந்தது.

பகுதி (A) ஆனது, கணக்கீட்டுச் சமன்பாடு பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்த அதே வேளை பகுதி (B) ஆனது, செம்மையாக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்று ஆகியன பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. பெரும்பாலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் அவர்களால் அதற்கான முழுப் புள்ளிகளைப் பெறக்கூடியதாகவும் இருந்தது.

**(A) கணக்கீட்டுச் சமன்பாடு:**

(1) தரப்பட்ட ஊடுசெயல்கள் கணக்கீட்டுச் சமன்பாட்டில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்பது பற்றிய விளக்கம் சில பரீட்சார்த்திகளிடம் இல்லை என்பதை அவர்களது விடைகளிலிருந்து அவதானிக்க முடிந்தது.

(2) சொத்துக்கள், பரிப்புக்கள், வருமானம் மற்றும் செலவினம் அதிகரிக்கும்போது அல்லது குறைவடையும்போது எவ்வாறு பதிவு செய்வது என்பது பற்றி அவர்களிடம் குழப்பமான நிலை காணப்பட்டிருந்தது.

(3) சிலர் கழித்தல் (-) அடையாளங்கள் இன்றி பதிவு செய்திருந்தனர்.

(4) சிலர் ஊடுசெயல்களின் பணப் பெறுமதி இன்றி ''அதிகரிக்கிறது'' அல்லது ''குறைவடைகிறது'' என வெறுமனே குறிப்பிட்டிருந்தனர்.

(5) சிலர் இரட்டைப் பதிவுகளைக் காட்டாது ஒற்றைப் பதிவுகளைக் காட்டியிருந்தனர்.

**(B) பகுதி (a) செம்மையாக்கப்பட்ட காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கு**

(1) சிலர் இந்தக் கணக்கின் ஆரம்ப வரவு மீதியைப் பதிவு செய்திருக்கவில்லை.

(2) சிலர் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் பதிவு செய்யப்பட வேண்டிய சில பெறுமானங்களைக்கூட இந்தக் கணக்கில் பதிவு செய்திருந்தனர்.

(3) சிலர், காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் வரவு மற்றும் செலவுப் பதிவுகளை இடம்மாற்றி பதிவு செய்திருந்தனர்.

(4) எவ்வாறாயினும், பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்தப் பகுதிக்கு நல்ல புள்ளிகளையே பெற்றிருந்தனர்.

**பகுதி (b) வங்கி இணக்கக் கூற்று:**

(1) சிலர், காசுக் கட்டுப்பாட்டுக் கணக்கில் பதிவு செய்ய வேண்டிய சில உருப்படிகளைக்கூட வங்கிக் கணக்கிணக்கக் கூற்றில் பதிவு செய்திருந்தனர்.

(2) சிலர் வங்கி மீதியிலிருந்து தேறாத காசோலைகளைக் கழித்திருந்தனர். ஆயினும் அவை வங்கி மீதியுடன் சேர்க்கப்பட வேண்டியவையாகும்.

(3) மேலும், சிலர் தேறாத வைப்புகளை வங்கி மீதியுடன் சேர்த்திருந்தனர். ஆயினும் அவை கூற்று மீதியிலிருந்து கழிக்கப்பட வேண்டியவையாகும்.

(4) எவ்வாறாயினும், அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு திருப்திகரமான வகையில் விடையளித்திருந்தனர்.

<u>**பகுதி C**</u>

**வினா இல. 06**

இவ்வினாவானது **பகுதி (a)** மற்றும் **பகுதி (b)** என 2 பகுதிகளைக் கொண்டிருந்தது. **பகுதி (a)** இல் முற்றடக்க வருமானக் கூற்றைத் தயாரிப்பது எதிர்பார்க்கப்பட்டதுடன் **பகுதி (b)** இல் நிதி நிலைக் கூற்றைத் தயாரிப்பது எதிர்பார்க்கப்பட்டது. இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்திகரமான மட்டத்தில் இருந்தது.

அவதானிக்கப்பட்ட சில பொதுவான தவறுகள் கீழே தரப்பட்டுள்ளன:

**(a) முற்றடக்க வருமானக் கூற்றின் தயாரிப்பு:**

(1) அதிகளவான பரீட்சார்த்திகள் காசாகப் பெறப்பட்ட வட்டி வருமானத் தொகையைக் கவனத்தில் எடுத்திருந்தனர். ஆயினும் அது பொருத்தமான தொகை அல்ல.

(2) வருடாந்த காட்சியறை வாடகைத் தொகையான ரூபா 1,200,000/- (Rs.100,000/- x 12) ஆனது கவனத்தில் கொள்ளப்படவில்லை. பரீட்சை மீதியில் காட்டப்பட்டிருந்த தொகையான ரூபா 1,100,000/- மாத்திரமே கவனத்தில் கொள்ளப்பட்டிருந்தது.

(3) தேய்மானம் சரியாகக் கணிப்பிடப்படவில்லை.

(4) அதிகளவான பரீட்சார்த்திகள் நிலையான வைப்புத் திகதியைச் சரியாக அடையாளம் கண்டிருக்கவில்லை. இதனால், அவர்கள் வட்டி வருமானத்தைப் பிழையாகக் கணிப்பிட்டிருந்தனர்.

(5) சிலர் சரியான செலவினங்களைத் துணியும்போது அட்டுறு மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணங்களைச் சேர்த்திருக்கவில்லை.

(6) நிதி நிலைக் கூற்றில் காட்டப்பட வேண்டிய உருப்படிகள் தொடர்பில் சரியான விளக்கத்தைக் கொண்டிராத சில பரீட்சார்த்திகள் அவற்றை முற்றடக்க வருமானக் கூற்றில் காட்டியிருந்தனர்.

உதாரணம்: காணி, கட்டடம், மோட்டார் வாகனங்கள், அலுவலக உபகரணங்கள், வியாபார வருமதிகள் மற்றும் வியாபார சென்மதிகள்.

(7) சிலர் மொத்த இலாபத்தைத் துணியும்போது இறுதி இருப்பைச் சேர்த்திருந்ததுடன் ஆரம்ப இருப்பைக் கழித்திருந்தனர்.

(8) வேறு சில பரீட்சார்த்திகள் நிலையான வைப்பு மீதான வட்டியை செலவினமொன்றாகக் கருதியிருந்தனர்.

(9) வேறு சிலர் அட்டுறுவான நீர் மற்றும் மின்சாரத்தின் பகுதிகளை செலவினங்களுடன் சேர்க்காது வருமானக் கூற்றில் தனித்தனியாகக் காட்டியிருந்தனர்.

(10) சிலர் பரீட்சை மீதியில் பெறுமானங்களை ஆயிரங்களில் காட்டியிருந்த அதே வேளை சீராக்கங்களுக்கான தொகைகளை அதன் முழுப் பெறுமதியில் காட்டியிருந்தனர்.

**(b) நிதி நிலைக் கூற்றின் தயாரிப்பு:**

(1) சிலர் வருமானக் கூற்றில் காட்டப்பட வேண்டிய சில உருப்படிகளை நிதி நிலைக் கூற்றில் காட்டியிருந்தனர்.

உதாரணம்: கொள்வனவுகள், விற்பனைகள், ஆரம்ப இருப்பு, நிலையான வைப்பு மீதான வட்டி வருமானம் மற்றும் வங்கிக் கட்டணங்கள்.

(2) அட்டுறு மின்சாரம் மற்றும் நீர்க் கட்டணம் என்பன நிதி நிலைக் கூற்றில் சரியாகக் காட்டப்படவில்லை.

(3) சிலர் திரண்ட தேய்மானத்தைப் பதிவு செய்வதற்குப் பதிலாக வருடாந்த தேய்மானக் கட்டணத்தை நிதி நிலைக் கூற்றில் பதிவு செய்திருந்தனர்.

(4) சிலர் நிலையான வைப்பு மீதான வட்டியை நிலையான வைப்புத் தொகையுடன் சேர்த்திருந்தனர்.

(5) சிலர் நிலையான வைப்பை நடைமுறையல்லாச் சொத்துக்களின் கீழ் காட்டியிருந்தனர்.

(6) சிலர் ஆரம்ப இருப்பை நடைமுறைச் சொத்துக்களின் கீழ் பதிவு செய்திருந்தனர்.

(7) சிலர் நிதி நிலைக் கூற்றின் உருப்படிகளை வகைப்படுத்திப் பதிவு செய்யாது ஒவ்வொன்றையும் ஒன்றின்கீழ் ஒன்றாகப் பதிவு செய்திருந்தனர்.

உதாரணம்: நடைமுறையல்லாச் சொத்துக்கள், நடைமுறைச் சொத்துக்கள், உரிமை யாண்மையும் பரிப்புக்களும், நடைமுறைப் பரிப்புக்கள் என வகைப்படுத்தியிருக்கவில்லை.

(8) சிலர் வியாபார வருமதிகளை நடைமுறைப் பரிப்பின் கீழும் வியாபார சென்மதிகளை நடைமுறைச் சொத்துக்களின் கீழும் காட்டியிருந்தனர்.

\- - -

**<u>பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை மட்டத்தை மேம்படுத்துவதற்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டிய பொதுவான விடயங்கள்</u>:**

**(1)** புதிய பாடத்திட்டத்தை முழுமையாகவும் ஆழமாகவும் படிக்கவும். புதிய பாட விடயங்கள் மீது கூடிய கவனம் செலுத்தவும்.

**(2)** வினாவைப் பல தடவைகள் வாசித்து வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடை அளிக்கவும். தேவையற்ற விடயங்களை எழுத வேண்டாம்.

**(3)** இப்பாடத்துடன் தொடர்புடைய புத்தகங்கள், கையேடுகள், மடல்கள், நாட்குறிப்பேடுகளைப் படிக்கவும்.

**(4)** அடிப்படைக் கோட்பாட்டு எண்ணக்கருக்களைச் சரியாக இனங்காண்பதுடன் வினாக்களுக்கு விடையளிப்பதற்குத் தேவையான திறன்களையும் வளர்த்துக் கொள்ளவும்.

**(5)** கையெழுத்து தெளிவாக இருக்க வேண்டும் என்பதுடன் வினா இலக்கங்களும் சரியாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.

**(6)** வினாத்தாளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதுடன் கணிப்பீடுகளையும் செய்முறைகளையும் சரியாக வெளிப்படுத்தவும்.

**(7)** அதிகளவான கடந்தகால வினாத்தாள்களில் பயிற்சி பெறுவதன் மூலம் அறிவை மேம்படுத்திக் கொள்ளவும்.

**(8)** உங்களது நேரத்தை வினைத்திறனாகப் பயன்படுத்தவும்.

**(9)** விடைத்தாள்களைக் கையளிப்பதற்கு முன்னர், வினா இலக்கங்கள் போன்றவை சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளனவா என்பதைப் பரீட்சிக்கவும்.

**(10)** சிறந்த தயார்நிலையுடனும் பரீட்சையில் சித்தியடையும் முனைப்புடனும் பரீட்சைக்குத் தோற்றவும்.

\- * * * -